செ.வெ.எண்:59 நாள்:24.10.2019

**கரூர் மாவட்டம்**

**டெங்கு இல்லாத மாவட்டமாக கரூரை உருவாக்குவோம் - டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் பேச்சு**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்டம் முழுவதும் டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுப்பதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் முழு வீச்சில் எடுக்கப்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தினந்தோறும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்து வருகின்றார்.

அந்த வகையில் கரூர் நகராட்சி சார்பில் டெங்கு தடுப்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், இன்று (24.10.2019) நடத்தப்பட்ட பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழக அரசின் சார்பில், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. டெங்கு காய்ச்சல் ஏடிஸ் கொசுக்களால் பரவக்கூடியது. இவ்வகை கொசுக்கள் பகலில் மட்டுமே கடிக்கும். வீட்டைச்சுற்றியும் தூக்கி எறியப்பட்ட பயனற்ற டயர்கள், பாட்டில்கள், பிளாஸ்டிக் பொருட்கள், பாலீதின் பைகள், டீ கப், தேங்காய் சிரட்டைகள் உள்ளிட்ட பொருட்களிலும் தேங்கிய மழை நீரிலும், பயன்பாட்டிற்காக வீட்டில் நீர் சேமித்து வைத்துள்ள சிமெண்ட் தொட்டிகள், பேரல்கள், வீட்டிற்குள்ளே பிரிட்ஜ், ஏர்கூலர்களிலும் நீர் தேங்கும் தொட்டிகள், மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்த்தேக்கும் தொட்டிகளிலும் இக்கொசுப்புழு உற்பத்தியாகின்றன. எனவே, இதுபோன்ற பயனற்ற பொருட்களை அப்புறப்படுத்திவிட வேண்டும் என்ற விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்பட வேண்டும்.

அத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியில் மாணவர்களாகிய நீங்களும் உங்களது பங்களிப்பை செலுத்த வேண்டும். உங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் என அனைவரிடத்திலும், டெங்கு காய்ச்சல் பரவும் விதம் குறித்தும், அதனை கட்டுப்படுத்த நாம் எடுக்க வேண்டிய முன்னேற்பாட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்தும் எடுத்துரைக்க வேண்டும். நமது கரூர் மாவட்டம் டெங்கு இல்லாத மாவட்டம் என்ற நிலையை உருவாக்க அனைவரும் தங்களால் ஆன ஒத்துழைப்பை அளிக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இப்பேரணியில் நகராட்சி ஆண்கள் , நகராட்சி பெண்கள் மேல்நிலை பள்ளி,கோட்டை மேடு நடுநிலை பள்ளி, சுரபி செவிலியர் கல்லூரியை சேர்ந்த 500-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இப்பேரணி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை, திண்ணப்பா கார்னர், பேருந்துநிலையம், ஜவகர் கடைவீதி வழியாக நகராட்சி அலுவலகம் வந்தடைந்தது.

இந்நிகழ்ச்சியில், கரூர் நகராட்சி ஆணையர்(பொ) திரு.இராஜேந்திரன், நகர் நல அலுவலர் மரு.ஸ்ரீப்பிரியா, மரு.ஆனந்தகுமார் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.